**கலென்பிந்துனுவெவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 11 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் பேணப்படுகின்ற நீதிமன்றத் தண்டப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,327,740 ஆக இருந்த போதிலும், அது ரூபா 605,458 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆண்டின் போது ரூபா 3,452,403 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த PVC நீர்க்குழாய் இருப்பு கையிலுள்ள இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 169,196 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விட கூடிய செலவினம் ரூபா 2,923,387 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 குத்தகை வாடகை

(அ) 2014 திசெம்பர் 18 ஆந் திகதிய கேள்விச் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக கலன்பிந்துனுவெவ வாரச்சந்தை ரூபா 2,215,600 ஆன வருடாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாரச்சந்தையின் திருத்த வேலைகள் காரணமாக வாடகை தொகையில் ரூபா 92,316 ஐ பதிவழிப்பதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 357,150 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,748,108 தொகையான வருமானத்திற்கான வைப்புக் கணக்கை பகுப்பாய்வு செய்த போது ரூபா 755,550 தொகையான மீதி தொடர்பான வைப்பாளர்களின் விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்திலிருந்து கலென்பிந்துனுவெவ நகர நீர் வழங்கலுக்காக ஒதுக்கப்பட்ட 05 மில்லியன் தொகைக்கு சமமாக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,452,403 பெறுமதியான PVC நீர்க் குழாய் இருப்பு 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தினை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்தக் கட்டுப்பாடு

(அ) ரூபா 141,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்ட 133 கியுப் குருணிக் கற்கள் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி மற்றும் அந்த ஒவ்வொரு வீதிக்கும் இடப்பட்ட குருணிக் கற்கள் அளவு எவ்வளவு என்பது போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்குரிய நிர்வாக செலவினங்களிலிருந்து ரூபா 226,252 தொகை வடமத்திய மாகாண பிரதான செயலாளரின் 2009 ஏப்ரல் 20 ஆம் திகதிய 2009/9 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்து படிகளாக 10 உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

சபையின் ஆதனங்கள் தொடர்பாக 1989 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 203 ஆவது விதியின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு கடந்த பல வருடங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 விளைவற்ற சொத்துக்கள்

(அ) நீர் செயற்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,452,403 கிரயத்திலான PVC நீர்க் குழாய் இருப்பு சபை வளவில் விளைவற்று காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,572,000 தொகையான 02 வாகனங்களும், ரூபா 1,325,000 தொகையான 02 இயந்திரங்களும் பெறுமதி குறிப்பிடப்படாத கெப் வண்டியொன்றும் மீளாய்வாண்டினுள் உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

ஹுருளனிகவெவ பிரிவில் சனசமுக மண்டபத்தை நிர்மாணித்தல் ஹுருளனிகவெவ பெதும் எல விவசாய அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டு ரூபா 956,763 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், நிர்மாணம் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது சாந்து இடப்பட்ட இடங்களில் கோடுகள் விழுந்துள்ளமை, பலான்சி இடுவதற்கான துவாரங்கள் முறையாக மூடப்படாமை, முகட்டு ஓடு இடும்போது சாந்து பூசி ஓடுகள் விழாமல் நிரந்தர நிலைமைக்கு உட்படாதிருந்தமை, சட்டகங்கள் தயாரித்து பொருத்தும் போது அவை 16mm ஆணிகளைப் பயன்படுத்தி 6 mm உட்தகடுகளுடன் தொடர்புபடுத்தப்படாதிருந்தமை பேர்லின் தயாரித்து 10mm ஆணி பயன்படுத்தி பொருத்துதல் இடம்பெறாதிருந்தமை, துருப்பிடித்தலை தவிர்க்க பூச்சு நியமப் பிரகாரம் பூசப்படாதிருந்தமை என்பன அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்